SIVANMANAI

திருச்சிற்றம்பலம்

# திருவாசகம்

## பதிகம்: திருத்தோள் நோக்கம்

THIRUVASAGAM GROUP

Scan this QR code using the WhatsApp Camera to join this group

**சிவன்மனை**

**சென்னை-600091**

www.fhyzics.net/sivanmanai

# திருத்தோள் நோக்கம்

(தில்லையில் அருளியது)

**திருச்சிற்றம்பலம்**

பூத்தாரும் பொய்கைப் புனல்இதுவே எனக்கருதிப்
பேய்த்தேர் முகக்குறும் பேதைகுணம் ஆகாமே
தீர்த்தாய் திகழ்தில்லை அம்பலத்தே திருநடம்செய்
கூத்தாஉன் சேவடி கூடும்வண்ணம் தோணோக்கம்.

என்றும் பிறந்துஇறந்து ஆழாமே ஆண்டுகொண்டான்
கன்றால் விளவுஎறிந்தான் பிரமன் காண்பரிய
குன்றாத சீர்த்தில்லை அம்பலவன் குணம்பரவித்
துன்றுஆர் குழலினீர் தோள்நோக்கம் ஆடாமோ.

பொருள்பற்றிச் செய்கின்ற பூசனைகள் போல்விளங்கச்
செருப்புற்ற சீர்அடிவாய்க் கலசம் ஊன்அமுதம்
விருப்புற்று வேடனார் சேடுஅறிய மெய்குளிர்ந்துஅங்கு
அருள்பெற்று நின்றவா தோள்நோக்கம் ஆடாமோ.

கற்போலும் நெஞ்சம் கசிந்துஉருகக் கருணையினால்
நிற்பானைப் போலஎன் நெஞ்சினுள்ளே புகுந்தருளி
நற்பாற் படுத்துஎன்னை நாடுஅறியத் தான்இங்ஙன்
சொற்பாலது ஆனவா தோள்நோக்கம் ஆடாமோ.

நிலம்நீர் நெருப்புஉயிர் நீள்விசும்பு நிலாப்பகலோன்
புலன்ஆய மைந்தனோடு எண்வகையாய்ப் புணர்ந்து நின்றான்
உலகுஏழ் எனத்திசை பத்துஎனத் தான் ஒருவனுமே
பலவாகி நின்றவா தோள்நோக்கம் ஆடாமோ.

புத்தன் முதலாய புல்அறிவிற் பல்சமயம்
தத்தம் மதங்களில் தட்டுளுப்புப் பட்டுநிற்கச்
சித்தம் சிவமாக்கிச் செய்தனவே தவம்ஆக்கும்
அத்தன் கருணையினால் தோள்நோக்கம் ஆடாமோ.

தீதுஇல்லை மாணி சிவகருமம் சிதைத்தானைச்
சாதியும் வேதியன் தாதைதனைத் தாள்இரண்டும்
சேதிப்ப ஈசன் திருவருளால் தேவர்தொழப்
பாதகமே சோறு பற்றினவா தோள்நோக்கம்.

மானம் அழிந்தோம் மதிமறந்தோம் மங்கைநல்லீர்
வானந் தொழுந்தென்னன் வார்கழலே நினைந்துஅடியோம்
ஆனந்தக் கூத்தன் அருள்பெறில் நாம் அவ்வணமே
ஆனந்தம் ஆகிநின்று ஆடாமோ தோள்நோக்கம்.

எண்உடை மூவர் இராக்கதர்கள் எரிபிழைத்துக்
கண்ணுதல் எந்தை கடைத்தலைமுன் நின்றதன்பின்
எண்ணிலி இந்திரர் எத்தனையோ பிரமர்களும்
மண்மிசை மால்பலர் மாண்டனர்காண் தோள்நோக்கம்.

பங்கயம் ஆயிரம் பூவினில்ஓர் பூக்குறையத்
தங்கண் இடந்துஅரன் சேவடிமேல் சாத்தலுமே
சங்கரன் எம்பிரான் சக்கரம் மாற்கு அருளியவாறு
எங்கும் பரவிநாம் தோள்நோக்கம் ஆடாமோ.

காமன் உடல்உயிர் காலன்பல் காய்கதிரோன்
நாமகள் நாசிசிரம் பிரமன் கரம்எரியைச்
சோமன் கலைதலை தக்கனையும் எச்சனையுந்
தூய்மைகள் செய்தவா தோள்நோக்கம் ஆடாமோ.

பிரமன் அரிஎன்று இருவரும்தம் பேதைமையால்
பரமம் யாம்பரமம் என்றவர்கள் பதைப்புஒடுங்க
அரனார் அழல்உருவாய் அங்கே அளவுஇறந்து
பரம்ஆகி நின்றவா தோள்நோக்கம் ஆடாமோ.

ஏழைத் தொழும்பனேன் எத்தனையோ காலம்எல்லாம்
பாழுக்கு இறைத்தேன் பரம்பரனைப் பணியாதே

ஊழிமுதல் சிந்தாத நன்மணிவந்து என்பிறவித்
தாழைப் பறித்தவா தோள்நோக்கம் ஆடாமோ.

உரைமாண்ட உள்ஒளி உத்தமன்வந்து உளம்புகலும்
கரைமாண்ட காமப் பெருங்கடலைக் கடத்தலுமே
இரைமாண்ட இந்திரியப் பறவை இரிந்துஓடத்
துரைமாண்டவா பாடித் தோள்நோக்கம் ஆடாமோ.

**திருச்சிற்றம்பலம்**

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி